26 ஏப்ரல் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH பாஸ்கா காலம் மூன்றாம் ஞாயிறு
மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

**பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்**

## அவர் நம்மோடு பேசும் போது நமது உள்ளம் பற்றி எரியவில்லையா?

அறிவிப்பாளர்களே! சாட்சிகளே! துணிச்சலும் வீரமும் மிகுந்த திருத்தூதர் பேதுருவையும் மற்றத் திருத்தூதர்களையும் இவை வருணிக்கின்றன. இயேசுவை விட்டு விலகி, அறியேன் என்று கூறிய பேதுரு, ஆயிரக்கணக்காக மக்கள் கூட்டத்தைப் பார்த்து, மனந்திரும்புங்கள் என அறைகூவல் விடுக்கிறார். இன்றைய முதல் வாசகத்தைப் படிக்கும் போது, உயிர்ப்பின் ஆற்றலால் உருவமாற்றமடைந்த பேதுரு, நாளும் அறிந்த நாவலர் போல் பேசுகிறார்.



திவ்விய நற்கருணை சீடன், வெளிச்சத்தைக் கொடுக்கும் தீபம் போன்றவர்...எங்கும் போய் அவரை அறிவியுங்கள்ஸ.

– னித பீட்டர் ஜூலியன் ஏயமார்ட்

கம்பீரமான குரலுடன் பேதுரு அறிவிக்கிறார், ‘பேதுருவின் பேச்சைக் கேட்போது நமது உள்ளம் பற்றி எரியவில்லையா?’

இப்போது, கிளியோபாஸ் என்ற இயேசுவின் சீடருடன் எவ்வாவுஸ் செல்வோம் வாரீர். நீங்கள்தான் மற்றொரு சீடர். உலகிற்கு ஒளியாக விளங்கும் கிறிஸ்துவை இந்த பாஸ்கா காலத்தில் நீங்கள் அனுபவித்திருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். உங்களது வசதியான நிலையை விட்டு, நற்செய்தியை அறிவிக்கும் சீடராக இருக்க வேண்டும் என அவ்வப்போது நினைவுறுத்தப்படுகிறது. கிளியோபாஸ் உடன் சேர்ந்து நீங்கள் ஆழ்ந்த சிந்தனையுடன் நடக்கும், இயேசுவும் உடன் வருவார். கடந்த வாரங்களில் நிகழ்ந்த சம்பவங்களும், இயேசு உயிர்த்து விட்டார் என்ற வதந்தியும் சேர்ந்து, கிளியோபாஸ்சின் நிலையை தலைகீழாக மாற்றி விட்டது. இதனால் அவர் குழப்பத்திற்கு ஆளானார். உங்களுக்கும் கூட, கடந்த வாரத்தில் பாஸ்கா நிகழ்வுக்கு மீண்டும் உயிரோட்டம் கொடுத்தது, உங்கள் மனதைத் தொடவில்லையா? கொஞ்சமாவது!

அவர்களோடு நடக்கும் போது வழியெல்லாம் இயேசு பேசிக் கொண்டு வந்தார். குழப்பத்தில் இருக்கும் மனிதனுக்கும் ஏன் உங்களுக்கும், மீட்பின் கதையை அவர் சொல்லிக் கொண்டு வந்தார். அவர்களோடு அப்பத்தைப் பீட்கும் போது, கிளியோபாஸ் அவரை அடையாளம் கண்டு கொண்டார். இயேசுவைச் சந்திப்பதற்குக் கொண்டு செல்லும் அப்பத்தைப் பீட்கும் எளிமையான நிகழ்வில், தமது இதயத்தை அவர் இயேசுவிற்குத் திறந்து வைத்தார்.

நீங்கள் எப்படி? இயேசுவைச் சந்தித்தது பற்றிய செய்தியைப் பகிர்ந்து கொள்ள மீண்டும் கிளியோபாஸ் உடன் நடக்கப் போகிறீர்களாக? “வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?” என கிளியோபாசுடன் சேர்ந்து சொல்லப் போகிறீர்களா?

நற்கருணை நாதன் இன்றும் நம்மோடு இருக்கிறார். இப்போது இல்லாவிட்டால், பின்னர் எப்போது? ஆண்டவரைத் தனியாக சந்தித்து உரையாடுவதற்கு அவரோடு மற்றொரு முறை நடந்து செல்ல வேண்டுமா! அப்படியானால், நற்செய்தியை உங்களோடு மட்டும் வைத்துக் கொள்ளாதீர்கள். இயேசுவை அறிவியுங்கள், பகிர்ந்து கொள்ளுங்கள். இன்னும் எத்தனையோ பேர் நமது உயிர்த்த ஆண்டவரை அறியாமல் இருக்கிறீர்கள். ✝

### இன்றைய வாசகங்கள்:

திப. 2: 14, 22-33
திபா. 15: 1-2, 5, 7-11
1பேதுரு 1: 17-21
லூக்கா 24: 13-35

### வாரம் ஒரு வசனம்

நற்செய்தியை உங்களோடு மட்டும் வைத்துக் கொள்ளாதீர்

INTERNAL CIRCULATION ONLY
BUL 17/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 ஏப்பிரல் (சித்திரை) மாதத்தின் கருப்பொருள்:*
***பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: உயிர்ப்புக் காலம் 3ஆம் ஞாயிறு 25 ஏப்பிரல் - 03 மே 2020
தி.பணி 2:14, 22-33 தி.பா: 16: 1-2, 5, 7-8, 9-10, 11 1 பேதுரு 1: 17-21 லூக்கா 24: 13-35
" ஆண்டவரே, வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்." - தி.பா 16

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1)பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு:: ஜோன் டேவிட்சன்(017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com

கொவிட் 19, நோய் பரவல் காரணமாக, ஆலயத்தில் திருப்பலிகள் நடைபெறாது

ஹெரால்ட் வார இதழ், இணையத்தின் வழி படித்து தெரிந்துகொள்ளலாம்: **www.heraldmalaysia.com**

பங்கு அலுவலகம் 12 மே வரை மூடப்பட்டிருக்கும்.
அவசர தேவைகளுக்கு தொடர்பு கொள்ள: நாதன் 012-684 0750) கொலின்ஸ் (016-364 7506)

2020 ஏப்பிரல் ***(சித்திரை) மாத செய்திகள் / நிகழ்வுகள்***
1. பங்கு காணிக்கை:
18/19 ஏப்பிரல் ________

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

**கொவிட் 19 நோயால் பாதிப்புற்று மரித்த அனைத்து ஆன்மாக்களும் இறைவனில் முடிவில்லா வாழ்வு பெற மன்றாடுவோம்.**

➢ **உங்கள் உள்ளத்தையும், எண்ணத்தையும் காத்துக்கொள்ளுங்கள்**

அன்புள்ள சகோதர சகோதரிகளே ! உயிர்த்த ஆண்டவரின் மகிழ்ச்சியும் அமைதியும் , இந்த காலகட்டத்தில் உங்களுள் தொடர்ந்து நிறைவாய் இருப்பதாக! வீட்டிலேயே அடைந்து கிடப்பது நம்மில் பலருக்கு சலிப்பாகவும், அசாதாரணமாகவும் இருக்கும். இதன் காரணமாய் எண்ண்னங்களும் அலைபாயும்.

நீதிமொழி: 4:23 கூறுகிறது: " விழிப்பாயிருந்து உன் இதயத்தைக் காவல் செய்; ஏனெனில் அதனின்று பிறப்பவை உன் வாழ்க்கையின் போக்கை உறுதி செய்யும்."

நம்மில் பலருக்கும் வெளி உலக வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க எண்ணம் வரும். ஆனால் அது நம்முடைய உள்ளத்தின் அமைதியையும், எண்ணத்தையும் பாதிக்கும். இந்த கால கட்டத்தில் உங்கள் உள்ளத்தின் ஆழத்திற்குசென்று உங்கள் எண்ணத்தையும், இதயத்தையும் ஆராய்ந்து பார்த்து, உங்கள் உணர்வுகளின் வழியாக, வாழ்க்கையின் போக்கை தீர்மானம் செய்யுங்கள். கடவுள் மற்றும் அவரின் வாக்குறுதிகளின் மீது நம்முடைய எண்ணத்தை ஒரு நிலைப்படுத்தி, அவர் தந்த வாழ்வை முழுமையாக வாழ அக்கறை கொள்ளுங்கள்.

**ஆசீரும் அமைதியும் எப்போதும் உங்களில் தங்குவதாக!**
**அன்புடன் அருட்பணி சேவி மற்றும் கென்னத்**

➢ <u>நடமாட்டக் கட்டுப்பாட்டை முன்னிட்டு, இறப்பு சடங்குகளுக்கான வழிமுறைகள்.</u>

(1) வீடுகளில் அல்லது பார்லரில் ஏழு நாள் செப வழிபாடு நடைபெறாது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தனிப்பட்ட வகையில் செப வழிபாட்டை நடத்திக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான செப புத்தகங்கள் பங்கு/அதிசு விலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.. இறப்பு இல்லத்தில் நெருங்கிய உறவினர்கள் மிக குறைவான நேரமே இருக்க முடியும்.
(2) விழிப்பு செபங்கள் பங்கு குருவானவரால் இல்லத்திலேயே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய நாட்டின் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின்படி இறப்பு இல்லத்தில் அதிகமான நபர்களைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் இதனால் நம்முடைய ஆலயமும் எந்த வழிபாட்டுக்கும் திறந்திருக்காது.
(3) இந்த நேரத்தில் பிற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். (இடைவெளியைக் கடைப்பிடித்தல்)

➢ ஏப்ரல் மாதத்தில் முன்பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் வேறு தேதிகளுக்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

➢ தினமும் இணையத்தின் வழி திருப்பலிகளில் பங்கெடுக்க: ***www.Tv.ArchKL.org***